RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1322

# பரிபாடல் வழி அறவழி கோட்பாடுகள்

**க. சாந்தி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்- 621212, தமிழ்நாடு, இந்தியா

# Principles of Morality Through Paripaadal

**K. Shanthi** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women, Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: shanthisasik@gmail.com

Received: 31-05-2022
Revised: 15-08-2022
Accepted: 03-09-2022
Published: 21-11-2022

Check for updates

## ABSTRACT

Many scholars hail Tamil as the language of devotion. There is more moral literature in Tamil than in other languages. The literature in the Tamil language has the power to inculcate morality in mankind and thereby inculcate morality. The sixth knowledge of the people is the result of morality. This sixth sense is the difference between people and animals. A man lives by defining what things should be done and how to do them. Literature conveys this way of life to the human mind. Those who are virtuous are the highest. For a disciplined person, all the places they go to are special. Literature helps us to prevent the mind, language, and truth from going down the evil way and keep them in righteousness. It is a proverb that moral order governs the town. The country does not fail to appreciate those who have walked according to discipline. Righteousness is better. That's what will win. The absolute form is a set of moral systems that man has defined for himself. It is righteousness to cut off the evil deeds that bring about man's birth. When this is followed, it blossoms into a quality of morality and becomes respected as a way of life.

**Keywords:** Moral, Paripaadal, Discipline, Mankind.

## முன்னுரை

கருத்தாக்கம் இதனையே கோட்பாடு என்ற சொல்லால் கூறுகிறோம். இக்கோட்பாடுகள் சிந்தனை தெளிவினாலும் ஏற்றுக் கொள்ளல் என்பதனாலும் சமுதாய நிலைபாட்டினாலும் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன.

தமிழிலக்கிய மரபில் தனிச்சிறப்படன் திகழ்வது சங்க இலக்கியம் ஆகும். மக்களின் சமூக பின்னனியும் வாழ்க்கை நெறிமுறைகளையும் சங்க இலக்கியம் மூலமே அறிந்துக்கொள்ள முடிகிறது. எண்ணங்களை சொற்கள் மூலம் வெளிப்படுத்தும் கலை இலக்கியம் ஆகும். கோட்பாடு ஆழ்ந்த ஆராய்ச்சியை அடிப்படையாக கொண்டது. இயற்கை எவ்வாறு தொழிற்படுகிறது என்பது குறித்த ஒரு எண்ணம் சற்று சந்தேகத்துடன் முன்வைக்கப்படும்போது அது கருத்து எனப்படுகிறது. உறுதியாக முன்வைக்கப்பட்டால் அதுவே கொள்கை. இவற்றை கூறும்பொழுது கூறியவருக்கு கொஞ்சம் சந்தேகம் வந்த பிறகும் பிறக்கு அதன்மேல் உறுதிப்பாடு இருக்கும் என்றால் அதுவே கோட்பாடு ஆகும்.

இறைவனது வடிவங்களாகத் திகழும் விண, காற்று, நெருப்பு, நீர், மண் என்னும் ஐம்பூதங்களையும் ஞாயிறு, திங்கள், வெள்ளி முதல்வன் (இயமானன்) என்றும் எட்டு வகை வடிவங்களையும் விளக்கினார் பரிமேலழகர். எட்டாவதாக சொல்லப்பட்டது அறன். அறத்தின் வடிவம்

இறைவன். வேட்கை என்ற வடிவு தருமமாதலின் இது அறனெனப்பட்டது. ஆகவே பரிபாடல் கூறும் அறக்கோட்பாடுகளை பகுத்து விளக்கி கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## அறம் பரவிய காலம்

உரை என்ற சொல் தமிழில் சொல் என்றே பொருள் விளங்குமாறு அமைந்துள்ளது. வாய்மொழி இலக்கியமாக இவை முன்பு இருந்தன. மிகப் பழங்காலத்தில் மக்கள் செய்யுள் வடிவிலேயே தங்கள் கருத்தை எளிதில் விளக்கும் திறன் பெற்றிருந்தவர்களாய் இருந்திருத்தல் வேண்டும். விரிவுரை விளக்கங்கள் இன்றியே பொருள் உணர்ந்த காலமும் இருந்தது. இக்கருத்தை உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலம் உண்டு என்றும் உதாரணங்களை வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் என்பது கருத்து.

கற்றலினும் கேட்டலே நன்று என்று கேள்விச் செல்வத்தை பழங்காலத்தல் போற்றினர். செவி வாயிலாக நெஞ்சு களனாகக் கேட்கும்பான்மை அக்காலத்தில் மிகுதியும் வழக்கில் இருந்தது. ஒருவர் படிக்க மற்றவர் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்க வேண்டியவற்றை எழுதாமல் வாயால் கூறியே விளக்கி வந்தனர்.

"விரிப்பின் பெருகும்

விரிவஞ்சி விடுத்தாம்

வல்லார்வாய்க் கேட்டுணர்க

வந்தவழிக் காண்க முனைவர்"

என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதி சொல்லும் வழக்கம் அக்காலத்திலேயே எழுதுவதில் இருந்த இடையூறுகளை உணர்த்துகிறது (Parimanam, Balasubramaniyan, 2004).

"அறம் சார்ந்த நெஞ்சமும் அருள் சான்ற ஒழுக்கமும் கொண்டவர்கள் ஆதலின்

அந்தணர்களின் பெருமை விறல்மிகு விழுச்சீர் எனப்பட்டது.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழு கலான்"

என்னும் குறள் ஒப்புநோக்கத்தக்கது.

விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்

அறனும் ஆர்வலருக்கு அருளும் நீ

திறன் இலோர் திருந்திய தீது தீர் கொள்க

மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ"

என்ற பரிபாடல் மூலம் அந்தணர் காக்கும் அறனும் அருளும் அணங்கும் வானத்து திங்களும் அறனை வலியுறுத்துகிறது (Parimanam, Balasubramaniyan, 2004).

## சுற்றத்தோடு கூடி வாழும் அறம்

"ஆங்கு

காமரு சுற்றமொரு ஒருங்கு நின் அடியறை

யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக"

எம்மால் விரும்பப்படும் சுற்றத்தாரோடு இறைவனது திருவடியின் கண்ணே ஒன்று சேரக்கூடி வாழவேண்டும் என்ற அறம் பேணப்படுகிறது (Parimanam, Balasubramaniyan, 2004).

## ஒருவனுக்கு ஒருத்தி என்ற அறம்

நிலவில் களங்கம் உள்ளது போன்று ஒருவன் ஒருத்தியோடு இல்லாத வாழ்வு களங்கம் ஆகிறது. இதனால் ஒருத்தியோடு மனையரும் வழிப் பிறளொருத்தி அகலத்தை (மார்பினை) சேர்தல் கூடாமையின் சிறந்தது அன்று என்று பரிமேலழகர் அறத்தினை விளக்குகிறார் (Parimelalhagar, 2017)

## தந்தையை இகழா அறம்

பிரகலாதன் திருமாலை புகழ்ந்ததால் பொறுக்க முடியாத இரணியன்தன் நெஞ்சில் கொண்ட பொறாமையினால் புகைந்து சினத்துடன் தன்மகன் என்றும்பாராமல் பிரகலாதனை துன்புறுத்தினான். தன்னை இகழ்ந்து உரைக்கும் தன் தந்தையை பொறுத்துக் கொண்டு தந்தையை இகழாமல் திருமாலை உள்ளத்தில் நிறுத்திய வண்ணம் இருந்ததன் காரணமாக மகனாக அவனது அறம் இங்குசிறந்து விளங்குகிறது.

“அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்

இகழ்வோன் இகழா நெஞ்சினனாக” (Subramanian, 2004)

## பகை அகற்றும் அறம்

வேண்டுதல் வேண்டாமை இக்குறள் மூலம் இறைவன் தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று யாரையும் எண்ணுவதில்லை. அவருக்கு நண்பரும் பகைவரும் ஒன்றுதான். விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன் ஆவான். குணங்களை கடந்தவன் கடவுள். ஆதலால்தான் (நீர்க்குணன்) குணமிலி என்கிறார் பரிமேலழகர்.

“கடுநவை அணங்கும் கருப்பும் நல்கலும்

கொடுமையும் செம்மையும் வெம்மையும்

உள்வழி உடையை இல்வழி இலையே”

அறப்பண்புகள் உடையவரிடத்தும் மறப்பண்புகள் உடையவரிடத்தும் பகை அகற்றும் வல்லமை உடையவன் இறைவன் (Parimanam, Balasubramaniyan, 2004).

## பொய்கூறா அறம்

“அறவர் அடிதொடினும் ஆங்கு அவை சூளோன்”

தலைவன் பொய் சூள் கூறியதாக கருதி இனி பொய் கூற கூடாது என தோழி கண்டித்து நீ ஆணையிட்டு சூள்மொழி கூற விரும்பினால் அறவோராகிய அந்தணர் அடி தொட்டு கூறுக (Parimanam, Balasubramaniyan, 2004). வெற்றியையே தரும் வேலன் மீதும் மயில் மீதும் வேல்மீதும்

பொய் சத்தியம் கூறக்கூடாது என்று பொய் கூறா அறத்தினை தோழி விளக்குகிறாள்.

“தலைவியை விட்டு தலைவன் நீங்கா அறம்

இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்

பரத்தை உள்ளதுவே பண்புறு கழறல்”

கற்பொழுக்கத்தில் தலைவன் தலைவியை பிரிந்து செல்லும்போது தலைவிக்கும் தலைவனுக்கும் ஊடல் நிகழும். பண்புறு கழறல் பூப்பின் புறப்பாடு ஈராது நாளும் நீத்தகன்றுறைதல் அறத்தாறென்றே. பூப்பின் பின்வரும் பன்னிரண்டு நாளும் கருத்தரிக்கும் காலம். ஆதலின் அக்காலத்தில் தலைவியின் நிலையை அறிந்த தலைவன் தலைவியை உவந்து வந்து கூடி இன்புற்றான். இக்காலத்தில் தலைவியை விட்டு தலைவன் நீங்காது அறம் காக்கிறான் (Subramanian, 2004).

பண்டைத் தமிழகத்தே அறிவான் அமைந்த சான்றோர் தம்முள் சொற்போர் நடத்துவதுண்டு. அதனுடன் வெற்றிக்கொடி நிறுத்துவதும் உண்டு. இதனை

“பல்கேள்வித் துறை போகிய

தொல்லாணை நல்லாசிரியர்

உறழ்குறித்தெடுத்த உருகெழு கொடியும்”

என்ற பட்டினப்பாலை பாடல் ஒன்று விளக்குகிறது (Manickavasagam, 2006). இதனை பரிபாடலும் புல வெற்றியானது கல்வி கேள்விவல்ல சான்றோரும் இசை முதலிய கலை வல்ல சான்றோரும் சமய கணக்கரும் பிற அறிவுத் துறையினரும் தம்மையொத்த பிற நாட்டவர்களை வெல்லுதல் ஆகும். அறம் பெரிது ஆற்றி என்பதற்கு அறச் செயல்களை ஆற்றி என்றும் அதனைக் காப்பதாகும்.

## திருவருள் பெறும் அறம்

அறவழியில் வாழ்வோர் தூய உண்மை அன்பினை கடவுளிடத்து செலுத்துவர். அதன் விளைவாகத் திருவருள் எளிதில் கிட்டும். திருவருளால் இறைவனதுதிருவடி பேறு அடைவர். ஆகவே மெய்யன்பர் இவ்வுலகத்திற்கு வேண்டிய அறம், அன்பு, அருள் ஆகிய மூன்றையுமே வேண்டுவர்

“வேண்டுதல் வேண்டியாங்கு எய்தினர் வழிபட

ஆண்டான் குறைதலும் அறிந்தவாறே”

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் விளக்கியுள்ளார் (Manickavasagam, 2006). பரிபாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

## முடிவுரை

கார்காலத்தல் பொழியும் மழையானது மண்ணுக்கு வளம் சேர்க்கும். அதுபோன்று நாம் கடைபிடிக்கும் அறமானது நம் வாழ்விற்கு வளம் சேர்ப்பதோடுபிறவிப் பெருங்கடலை நீந்த வழி செய்யும் கோட்பாடு என்பன முடிவானது அல்ல. அவை நிகழ்காலத்தில் முக்கியத்துவம் தருவது. அமைப்பு வடிவம், அர்த்தம், பயன்பாடு முதலியவற்றிற்கு காரணமாக இருப்பதாகும் இக்கோட்பாடு இறந்த காலத்தையம் நிகழ்காலத்தையம் இணைப்பதான சொல்லப்படுகின்ற கோட்பாட்பாட்டை அப்படியே எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் கூறமுடியாது. ஆதரவு, ஏமாற்றம், எதிர்ப்பு அனைத்தும் தோன்றும். ஆனால் அவை அனைத்தும் இக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு உதவும். ஆகவே நம் சங்க இலக்கிய நூல்களை பொக்கிசமாக கையாண்டு அதில் கூறியுள்ள அறத்தினை பேணுவோம்

## References

Manickavasagam, Gna. (2006) Paripadal, Uma pathippagam, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyan K.V. (2004) Paripadal, New Century Book House, Chennai, India.

Parimelalhagar, (2017) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramanian, S.V. (2004) Paripadal Moolam Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License